Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 183 | உள்ளூர் - 02.07.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 183 | வெளியூர் - 03.07.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

கஷ்டங்கள் தீர எளிய பரிகாரங்கள்!

IBPS வங்கி 745 காலிப்பணியிடங்கள்!

விமானத்தில் புதிய கட்டண சலுகை!

விரைவில் கைதாகும் செந்தில்பாலாஜி?

## பனாமா கால்வாயை சீனா கைப்பற்ற அனுமதிக்க மாட்டோம்; அதிபர் டிரம்ப்!

வாஷிங்டன், ஜூலை. 02–

பனாமா கால்வாயை சீனா கைப்பற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என அதிபர் டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்தார்.

மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் அமைந்துள்ளது பனாமா கால்வாய். கரீபியன் கடல் மற்றும் பசிபிக் பெருங்கடலை இணைக்கும் வகையில், 82 கி.மீ., தூரத்துக்கு அமைந்துள்ளது இந்த கால்வாய். உலகின் கடல்சார் வணிகத்தில், 5 சதவீதமும், அமெரிக்காவின் வர்த்தகத்தில், 50 சதவீதமும், இந்த கால்வாய் வழியாகவே நடக்கின்றன. உலகின் முக்கிய கடல்சார் வணிகத்துக்கான இணைப்பாக இந்த கால்வாய் உள்ளது.




அமெரிக்காவால் வெட்டப்பட்ட இந்த கால்வாய், நீண்ட காலம் அமெரிக்காவால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. கடந்த, 1977ல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இந்த கால்வாயை நிர்வகிக்கும் உரிமையை 1999ல் பனாமாவுக்கு அமெரிக்கா வழங்கியது. ஒவ்வொரு ஆண்டும் 14 ஆயிரம் கப்பல்கள் இந்த பனாமா கால்வாய் வழியாகச் செல்கின்றன. அமெரிக்காவின் கப்பல்களில் சுமார் 75 சதவீதம், பனாமா கால்வாய் வழியாகதான் சென்று வருகின்றன. இதற்காக பனாமா பெரும் கட்டணத்தை அமெரிக்காவிடம் வசூலிக்கிறது.

அமெரிக்க கடற்படை கப்பல்கள் இடம் கூட கட்டணம் வசூலிக்கின்றனர் என்பது தான் டொனால்டு டிரம்பின் குற்றச்சாட்டாக உள்ளது. அமெரிக்க மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்டது இந்த கால்வாய் என்று டிரம்ப் மீண்டும் மீண்டும் கூறி வந்தார். சீனாவின் ஆதிக்கத்தில் இருக்கும் பனாமா கால்வாயை அமெரிக்கா கைப்பற்றும் என அதிபர் டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடந்த நூலக திறப்பு விழாவில் அதிபர் டிரம்ப் பேசியதாவது: கடந்த காலத்தில் அமெரிக்கா இக்கால்வாயின் கட்டுப்பாட்டை பனாமாவிடம் ஒப்படைத்தது ஒரு முட்டாள்தனமான தவறு. பனாமா கால்வாயை சீனா கைப்பற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். கட்டுப்பாட்டைப் பெற்ற பிறகு பனாமா போக்குவரத்து துறை கட்டணங்களை உயர்த்தியது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த கால்வாயில் சீனா செல்வாக்கு செலுத்த முயல்கிறது. அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இவ்வாறு அதிபர் டிரம்ப் பேசினார்.

## விடிய விடிய அடித்த ரஷ்யா..
# கதறும் உக்ரைன்..
## ஈரான் போர் முடிந்த அடுத்த கணமே இப்படியா?

கீவ், ஜூலை. 02–

ரஷ்யா படைகள், உக்ரைன் நாட்டின் தலைநகரான கீவ் மீது நேற்று இரவு அதிரடியான தாக்குதலை நடத்தியது மூலம், இப்பகுதியில் மீண்டும் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. ஒருப்பக்கம் அமெரிக்க – ஈரான் மத்தியிலான போர் பதற்றம் குறைந்து வர்த்தகமும், முதலீட்டு சந்தையும் இயல்பு நிலைக்கு திரும்பும் வேளையில், மறுபுறம் ரஷ்யா – உக்ரைன் மத்தியில் மீண்டும் போர் தாக்குதல் துவங்கியுள்ளது.



புதன்கிழமை இரவு துவங்கிய வியாழக்கிழமை வரையில் ரஷ்ய படைகள் கீவ் நகரின் பல்வேறு இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதில் சுமார் 8 பேர் மரணம் அடைந்தனர், பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இரவு முழுவதும் நடந்த இந்த தாக்குதலில் ரஷ்ய படைகள் பலேஸ்டிக் ஏவுகணை, க்ரூஸ் ஏவுகணை, டிரோன் தாக்குதல் என பல வகையில் தாக்கியதில் கட்டிடம் இடிந்து விழுந்தது தரைமட்டமானது.

ரஷ்யாவின் தாக்குதலில் இருந்து தப்பிக்க கீவ் நகர மக்கள் இரவோடு இரவாக மெட்ரோ ஸ்டேஷனில் தஞ்சம் புகுந்தனர். ரஷ்ய படைகள் சுமார் 28 இடங்களை டார்கெட் செய்து இத்தாக்குதலை நடத்தியுள்ளதாக கீவ் நகரின் ராணுவ நிர்வாக தலைவர் தைமூர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக உக்ரைன் – ரஷ்யா மத்தியிலான தாக்குதல் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் உக்ரைன் நாட்டின் நீண்ட தூரம் சென்று தாக்கும் டிரோன் மூலம் உக்ரைன் ராணுவம் ரஷ்யாவின் ராணுவ தளங்கள் மற்றும் எரிவாயு தளம் மீது தாக்கியது. இதனால் ரஷ்யாவின் சில பகுதிகள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அளவுக்கு நிலைமை மோசமானது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக நேற்றைய தாக்குதல் பார்க்கப்படுகிறது.

இதே நேரத்தில் உலகின் மறுமுனையில் அமெரிக்கா – ஈரான் மத்தியிலான கத்தார் நாட்டின் தலைநகர் தோகாவில் நடந்த பேச்சுவார்த்தையில் சாதகமாக மற்றும் சிறப்பான முன்னேற்றம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்க துணை அதிபர் ஜேடி வேன்ஸ் இதை உறுதிப்படுத்தினார்.

ஈரான் – அமெரிக்கா மத்தியில் சுமுகமான நிலை தொடர்ந்தால் ஜூன் 17ஆம் தேதி வரை திட்டமிட்டப்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் எனவும் கணிப்புகள் வெளியாகியுள்ளது. மேலும் இஸ்ரேல் தொடர்ந்து காசா மற்றும் லெபனான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது குறிப்பிடத்தக்கது. இதனால் ஈரான் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடம் வாய்ப்பு தொடர்ந்து குறையவும் வாய்ப்புள்ளது.

## தமிழக கவர்னர் மாற்றமா?

சென்னை, ஜூலை. 02–

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நேற்று டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நேரில் சந்தித்துப் பேசினார்.

ஆளுநர் காலை 11.30 மணி அளவில், டெல்லியில் உள்ள தமிழக அரசு இல்லத்துக்கு நேற்று சென்றடைந்தார். பின் மாலை 5.30 மணியளவில், அங்கிருந்து புறப்பட்டு கடமை இல்லத்துக்கு சென்றார். அங்கு அவர், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்தார்.



இந்தச் சந்திப்பு மரியாதை நிமித்தமான ஒனறாகும். சுமார் ஒருமணிநேரம் நடைபெற்ற இந்த ஆலோசனையின் போது இரு மாநிலங்களின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் சட்ட ஒழுங்கு குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி பொறுப்பை ஏற்றதில் இருந்து பரபரப்பான அரசியல் சூழ்நிலை நிலவி வருகிறது. குதிரை பேரம் நடப்பதாக தொடக்கத்திலேயே புகார்கள் கூறப்பட்டு வந்தன. அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் இது தொடர்பாக கவர்னரிடம் புகார் அளித்திருந்தார்.

தற்போது தி.மு.க.வின் அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி. குதிரை பேரம் தொடர்பான குற்றச்சாட்டை முன்வைத்து கவர்னர் ஆர். வி. அர்லேகருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மேலும் முன்னாள் அமைச்சர்கள் செந்தில் பாலாஜி மற்றும் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் மீதான அமலாக்க துறையின் நடவடிக்கை தொடர்பாகவும் பேசப்பட்டு இருக்கிறது. அவர்கள் மீது வழக்கு தொடர அனுமதி கோரி சமர்ப்பிக்கப் பட்ட கோப்புகளை விரைந்து பரிசீலிக்குமாறு தமிழக அரசு வலியுறுத்தி இருந்தது. இந்த விவகாரம் தொடர்பாகவும் கவர்னர் பேசியதாக தெரிகிறது. தமிழ்நாட்டுக்கு முழு நேர ஆளுநர் நியமிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ள சூழலில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

## தமிழக பட்ஜெட் - துறை வாரியாக முதல்மைச்சர் விஜய் ஆலோசனை!

சென்னை, ஜூலை 02–

தமிழக வெற்றிக்கழகம் தலைமையிலான தமிழ்நாடு அரசு தனது முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளது.

தவெக தலைமையிலான புதிய கூட்டணி அரசின் முதல் சட்டசபை கூட்டத்தொடர் கடந்த ஜூன் 18–ந்தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கி நடைபெற்றது. இதையடுத்து தவெக அரசின் முதல் பட்ஜெட் எப்போது தாக்கல் செய்யப்பட உள்ளது என்ற எதிர்பார்ப்பு பரவலாக எழுந்துள்ளது.




இந்நிலையில் தமிழக பட்ஜெட் தாக்கல் செய்வது தொடர்பாக துறை வாரியாக 22–ந்தேதி வரை முதலமைச்சர் ஆலோசனை மேற்கொள்கிறார். தமிழக பட்ஜெட் இம்மாத இறுதியில் அல்லது ஆகஸ்ட் முதல் வாரத்தில் தாக்கல் செய்யப்பட வாய்ப்பு உள்ளது.

## சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் தவெகவில் இணைந்தனர்..!!



சென்னை, ஜூலை. 02–

அ.தி.மு.க.வில் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு அக்கட்சியில் இருந்து டாக்டர் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் தங்கள் ஆதரவாளர்கள் 15 ஆயிரம் பேருடன் த.வெ.க.வில் இன்று இணைந்து கொண்டனர். அப்போது கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் சி. விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் முன்னாள் அமைச்சர்களுக்கு தவெக துண்டை அணிவித்து வரவேற்றார்.

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா முன்னிலையில் இணைப்பு விழா நடைபெற்றது. இதில் திருச்சியை சேர்ந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.வளர்மதி, திருப்பூரை சேர்ந்த முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன், முன் னாள் எம்.எல்.ஏ.க்கள் மான்ராஜ் (ஸ்ரீவில்லிபுத்தூர்),

எம்.ராம்குமார் (கும்பகோணம்), ராஜவர்மன் (திருச்சுழி). சதன்பிரபாகர் (பரமக்குடி), திருஞான சம்பந்தம் (பேராவூரணி), மாவட்ட செயலாளர்கள் பி.கே.வைரமுத்து (புதுக்கோட்டை), இளம்பை தமிழ்செல்வன் (பெரம்பலூர், ஒரத்தநாடு மா.சேகர் (தஞ்சை), சீனிவாசன் (திருச்சி) உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளும், 208 ஒன்றிய செயலாளர்களும் த.வெ.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இணைப்பு விழாவில் பங்கேற்பதற்காக கரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 200 பஸ்கள், 600 கார்கள் மூலம் 15 ஆயிரம் நிர்வாகிகள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஜூலை 10-ம் தேதி கரூர் செல்கிறார் முதல்வர் விஜய்!

சென்னை, ஜூலை. 02–

கரூர் அதிமுக எம்எல்ஏ எம்ஆர் விஜயபாஸ்கர் தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் அவர் இணைந்தார். இணையும் நிகழ்ச்சியில், தமிழக அமைச்சர்கள் பலர் பங்கேற்று பேசினர். அப்போது பேசிய அமைச்சர் ஆனந்த், 'வரும் ஜூலை 10ம் தேதி முதல்வர் விஜய் கரூர் செல்கிறார்' என அறிவித்தார்.

அங்கு நடக்கும் அரசு விழாவில் பங்கேற்று, நலத்திட்ட உதவிகளை முதல்வர் விஜய் வழங்க உள்ளார். அத்துடன், கரூர் சம்பவத்தில் இறந்தவர்களின் வீடுகளுக்கு சென்று, அவர்களின் புகைப்படத்திற்கு, மலர் தூவி மரியாதை செலுத்தவும், முதல்வர் விஜய் திட்டமிட்டு இருக்கிறார்.

## பெங்களூரு கல்குவாரியில் பாறை சரிந்து தொழிலாளர்கள் 7 பேர் பலி!

பெங்களூரு, ஜூலை. 02–

கர்நாடகாவில் கல்குவாரியில் ராட்சத பாறை சரிந்து விழுந்த விபத்தில், பீஹாரைச் சேர்ந்த தொழி லாளர்கள் 7 பேர் உயிரிழந்தனர்.



பெங்களூரு தெற்கு தாலுகாவிற்கு உட்பட்ட மடப்பட்டணா பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான கல்குவாரியில் இன்று அதிகாலை இந்த விபத்து நிகழ்ந்து ள்ளது. புதிய கிரஷர் இயந்திரம் அமைப்பதற்காக, தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு மேலே சுமார் 100 அடி உயரத்தில் ஹிட்டாச்சி இயந்திரம் மூலம் கற்களை அகற்றும் பணி நடந்தது.

அப்போது, எதிர்பாராத விதமாக ராட்சத பாறை உருண்டு, அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது விழுந்துள்ளது. இந்த விபத்து நடந்த நேரத்தில் சுமார் 15 முதல் 20 தொழிலாளர்கள் அங்குப் பணியாற்றி வந்துள்ளனர். இதில், 7 பேர் பாறைக்கு அடியில் சிக்கி உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசாரும், மீட்புப் படையினரும் இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் பலர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும், வேறு யாராவது இடிபாடுகளில் சிக்கியுள்ளார்களா எனத் தேடும் பணியில் மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டனர். இதற்காக, அப்பகுதி முழுவதும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு முதல்வர் டிகே சிவகுமார் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தலையங்கம் மதுரை மணி
வியாழக்கிழமை 02.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 18-ம் தேதி

# சாமானிய மக்களுக்கு அடுத்த ஷாக்..!



தென்மேற்குப் பருவமழை தொடங்கியிருந்தாலும், எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை. பருவமழையின் தீவிரம் குறைவாக இருப்பதால் மழைப்பற்றாக்குறை நிலவுகிறது; பல இடங்களில் மழை இன்னும் முழுமையாகத் தொடங்கவில்லை. இதனால் அனைத்துப் பகுதிகளிலும் மழைப்பற்றாக்குறை நீடிக்கிறது. 'எல் நினோ' (El Nino) விளைவு காரணமாக இந்த ஆண்டு இயல்பை விடக் குறைவான மழையே பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) கணித்துள்ளது. இது சாமானிய மக்களைப் பாதிக்கும்.

குறைந்த மழையினால் பால், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் மற்றும் காய்கறிகளின் விலைகள் உயரக்கூடும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். குறைந்த மழையால் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய இரண்டுமே பாதிக்கப்படும். அரசும் வேளாண் நிபுணர்களும் நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர்; இதற்கான பல்வேறு மாற்று வழிகளையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர். பயிர் திட்டமிடல் போன்ற ஏற்பாடுகள் தொடங்கப்பட்டாலும், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பெய்யும் மழையே மிக முக்கியமானது என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்..

குறைந்த மழையினால் கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. பசுந்தீவனப் பற்றாக்குறை கால்நடை வளர்ப்போருக்கான செலவுகளை அதிகரிக்கிறது. இது பால் உற்பத்தியை நேரடியாகப் பாதிக்கிறது. பால் உற்பத்தி குறைவதால் பால் நிறுவனங்கள் விலையை உயர்த்தக்கூடும். மழைப்பற்றாக்குறை நீடித்தால், ஜூலை மாதத்தில் பால் விலையில் சுமார் 3 முதல் 4 சதவீதம் வரை உயர்வு ஏற்படலாம் என்று துறை சார்ந்த அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். இது பால் மட்டுமல்லாமல் தயிர், பனீர், நெய், வெண்ணெய் மற்றும் சீஸ் போன்ற பால் சார்ந்த பொருட்களின் விலையையும் பாதிக்கும்.

மழை இல்லாததால் விவசாயிகள் பயிர் விதைப்பதில் தாமதம் ஏற்படும். பருப்பு வகைகள் மற்றும் பயறு வகைகளின் சாகுபடி குறையும்; இது உற்பத்தியைக் குறைக்கக்கூடும். சோயாபீன்ஸ் மற்றும் பிற எண்ணெய் வித்துப் பயிர்களின் விதைப்பும் மந்தமாக இருக்க வாய்ப்புள்ளது. இதனால் அவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய சூழல் உருவாகலாம். இறக்குமதி செலவு அதிகரித்தால், பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெயின் விலைகள் கணிசமாக உயரக்கூடும்.

மேலும் மழை பெய்யாவிட்டால், காய்கறி சாகுபடியும் குறையும். இது தக்காளி, கீரை வகைகள் மற்றும் எளிதில் அழுகக்கூடிய பிற பயிர்களின் விநியோகத்தைப் பாதிக்கலாம். இதனால் உள்ளூர் மற்றும் சில்லறைச் சந்தைகளில் விலைகள் கடுமையாக உயரக்கூடும். மக்காச்சோளம் மற்றும் சில 'காரிஃப்' (kharif) பருவப் பயிர்களும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. நீண்ட காலத்திற்கு மழைப்பொழிவு இயல்பை விடக் குறைவாக இருந்தால், உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு (food inflation) ஏற்படக்கூடும்.

# திருச்செந்தூர் கோவிலில் ரூ.1 கோடியில் காத்திருப்பு அறை: செல்போன் தடை அமல்!



தூத்துக்குடி, ஜூலை. 02–

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாகவும், ஆன்மிக சுற்றுலா தலமாகவும் விளங்கி வருகிறது. முகூர்த்த நாட்களில் இங்கு ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றன. விடுமுறை நாட்களிலும், சிறப்பான விசேஷ தினங்களிலும் கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில், 100 ரூபாய் கட்டண வரிசையில் வரும் பக்தர்களின் வசதிக்காக ஒரு கோடி ரூபாய் மதிப்பில் பிரம்மாண்ட காத்திருப்பு அறை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. ஒரே நேரத்தில் 2 ஆயிரம் பக்தர்கள் அமரும் வகையில் அமையவுள்ள இந்த அறையில், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளும் ஏற்படுத்தப்பட உள்ளன.

ஆவணி திருவிழாவிற்குள் இப்பணிகளை முடிக்க இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் உத்தரவிட்டுள்ள நிலையில், கோவில் தக்கார் அருள்முருகன் பணிகளை நேரில் ஆய்வு செய்தார். சாமி தரிசனம் செய்ய காத்திருக்கும் பக்தர்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த புதிய வசதி தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக பக்தர்கள் தெரிவித்துள்ளனர்.

**செல்போன் தடை தீவிரமாக அமல்**

ஐகோர்ட்டு மதுரை கிளை உத்தரவின்படி, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கடந்த 14.11.2022 முதல் பக்தர்கள் செல்போன் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. தற்போது ஐகோர்ட்டு உத்தரவை முழுமையாக செயல்படுத்தும் வகையில், கோவில் வளாகத்தில் பக்தர்கள் செல்போன் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடை நேற்று முதல் தீவிரமாக அமல்படுத்தப்பட்டது. அதன்படி, கோவிலில் இலவச பொது தரிசன வரிசை, ரூ.100 கட்டண விரைவு தரிசன வரிசை, மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான வரிசை ஆகிய அனைத்து இடங்களிலும் பக்தர்களிடம் செல்போன் உள்ளதா? என்று போலீசார் சோதனையிட்டனர். மேலும், மெட்டல் டிடெக்டர் கருவி மூலமும் தீவிர சோதனை செய்தார்கள். கோவில் பாதுகாப்பு பணியாளர்களும் பக்தர்களின் உடைமைகளை சோதனை செய்த பிறகே கோவிலுக்குள் அனுமதித்தனர்.

# பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி?



கள்ளக்குறிச்சி, ஜூலை. 02–

பயிர் கடன் தள்ளுபடி குறித்து புதிய தகவல் ஒன்றை வேளாண்மைத்துறை அமைச்சர் வினோத் தெரிவித்துள்ளார். கள்ளக்குறிச்சியில் பேட்டியளித்த அவர்,தமிழகத்தில் பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வது குறித்து முதலமைச்சர் விரைவில் அறிவிப்பார். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்து, அவர்கள் அனைவரும் பயனடையும் வகையில் புதிய வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். கடந்த அரசை போல தவெக அரசிலும் தனி பட்ஜெட்டாகவே வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். வரவிருக்கும் வேளாண் பட்ஜெட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அமையும் என்று அவர் தெரிவித்தார்.

# திறன் தேர்வில் பூஜ்ஜியம் மதிப்பெண்: நீதிபதிகளின் உதவியாளர்கள் நியமனம் ரத்து: ஐகோர்ட் உத்தரவு!

சென்னை, ஜூலை. 02–

திறன் தேர்வில் பூஜ்ஜியம் மதிப்பெண் பெற்றவர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட 17 பேரின் நியமனங்களை ரத்து செய்த சென்னை உயர் நீதிமன்றம், விதிகளை பின்பற்றி மீண்டும் தேர்வு நடைமுறைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது.

# ரஷியாவில் வரலாறு காணாத பெட்ரோல் தட்டுப்பாடு!



மாஸ்கோ, ஜூலை. 02–

பெட்ரோல் தட்டுப்பாட்டை சமாளிக்க பெலாரஸ் உள்ளிட்ட அண்டை நாடுகளிடம் இருந்தும், இந்தியாவிடம் இருந்தும் எரிபொருள் இறக்குமதி செய்ய ரஷியா திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷியா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையே 5 ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது. இந்த நிலையில், உக்ரைன் ராணுவம் சமீபத்தில் ரஷியாவிற்குள் புகுந்து அங்கிருந்த 50–க்கும் மேற்பட்ட பெரிய பெட்ரோல், டீசல் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் குண்டு வீசி தகர்த்துள்ளது. இதனால், உலகிற்கே பெட்ரோல் கொடுக்கும் வல்லமை படைத்த ரஷியாவில் இப்போது வரலாறு காணாத பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள எரிபொருள் நிலையங்களில் பெட்ரோல் வாங்குவதற்காக பொது மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். நாட்டின் பாதிக்கும் மேற்பட்ட ஊர்களில் பெட்ரோல் போடுவதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் பெட்ரோல் நிலையங்களில் வரிசையில் நிற்பவர்களின் அவசரத் தேவைக்காக நடமாடும் கழிப்பறைகள் கூட அமைக்கப்பட்டுள்ளன. இந்த திடீர் தட்டுப்பாட்டை சமாளிக்க முடியாமல் அதிபர் புதின் அரசு தற்போது திணறி வருகிறது.

ரஷியாவைப் பொறுத்தவரை கோடை காலங்களில் எரிபொருள் தேவை அதிகமாக உள்ளது. இதன்படி நாள் ஒன்றுக்கு சுமார் 1,10,000 டன் பெட்ரோல் தேவைப்படுகிறது. இந்த சூழலில், பெட்ரோல் தேவையை சரிகட்டுவதற்காக பெலாரஸ் உள்ளிட்ட தனது அண்டை நாடுகளிடம் இருந்தும், இந்தியாவிடம் இருந்தும் எரிபொருள் இறக்குமதி செய்ய ரஷியா திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே பெலாரஸ் நாட்டிடம் இருந்து ரஷியா பெட்ரோல் இறக்குமதி செய்து வரும் நிலையில், மேலும் இறக்குமதியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதே சமயம், ரஷியாவிடம் இருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது. ஜூன் மாதத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில், ரஷிய எண்ணெயின் பங்கு பாதிக்கும் அதிகமாக இருந்துள்ளது. ஜூன் மாதத்தில் ரஷ்யாவிடம் இருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 2.70 மில்லியன் பீப்பாய் எண்ணெய்யை இந்தியா பெற்றுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவிடம் இருந்து பெட்ரோல் வாங்குவதற்கு ரஷியா திட்டமிட்டு வருவதாக கூறப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் இது குறித்து ரஷியாவின் எரிசக்தி அமைச்சகமும், இந்தியாவின் பெட்ரோலிய அமைச்சகமும் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பனைக்குளத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு. ராஜீவ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம், அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் மற்றும் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் அதிரடி மாற்றம்!

சென்னை, ஜூலை. 02–

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அனைத்து சேவைகளும், மாநிலம் முழுவதும் விற்பனை செய்யப்படாத மனைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் விற்பனை உட்பட, அனைத்தும் முழுமையாக ஆன்லைன் முறைக்கு மாற்றப்படும் என்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்குமார் புதன்கிழமை தெரிவித்தார்.

# ஆகஸ்ட் 18.. டாடா குழுமத்திற்கு முக்கியமான நாள்.. என்.சந்திரசேகன் எதிர்காலம் என்ன?




ரத்தன் டாடா மறைவிற்கு பின்பு டாடா குழுமத்தின் உயர்மட்ட குழுவில் பல நெருக்கடியான சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருக்கும் வேளையில், மிக முக்கியமானதாக டாடா சன்ஸ் நிறுவனத்தின் சேர்மன் ஆக இருக்கும் என். சந்திரசேகரன் மீண்டும் இப்பதவியில் நியமிக்க வேண்டுமா வேண்டாமா என்ற முக்கியமான கேள்விக்கு ஆகஸ்ட் 18ஆம் தேதி முடிவு செய்யப்பட உள்ளது. டாடா குழுமத்தில் பல வர்த்தக பிரிவுகள் பெரும் நஷ்டத்தில் இயங்குவது, டாடா சன்ஸ் ஐபிஓ விவகாரம், டாடா சன்ஸ் நிறுவனத்தில் பலோன்ஜி குடும்பம் வைத்திருக்கும் பங்குகளை விற்பது தொடர்பான விவகாரங்கள் குறித்து அடுக்கடுக்கான கேள்விகளை நோயல் டாடா தற்போது என்.சந்திரசேகரனிடம் கேட்டு வருகிறார். இதற்கான விரிவான திட்டம், திர்வை எட்டும் ரோடுமேப் இல்லாமல் டாடா சன்ஸ் சேர்மன் பதவியே நீட்டிக்க முடியாது என திட்டவட்டமாக தெரிவித்தார் நோயல் டாடா. இத்தகைய முக்கியமான கட்டத்தில் ஆகஸ்ட் 18ஆம் தேதி டாடா சன்ஸ் நிறுவனத்தின் வருடாந்திர பொது கூட்டம் நடக்கிறது. இக்கூட்டத்தில் டாடா சன்ஸ் நிர்வாக குழுவில் என். சந்திரசேகரன் தொடர் நீட்டிக்க பதவி கால நீட்டிப்பு குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டும். டாடா சன்ஸ் தலைவராக சந்திரசேகரன் தொடர வேண்டும் என்றால் டாடா சன்ஸ் நிர்வாக குழுவில் டைரெக்டராக மீண்டும் நியமிக்கப்பட்டால் மட்டுமே இப்பதவியில் மறு நியமனம் செய்ய முடியும்.


# பழனி பெரியாவுடையார் சிவன் கோவிலில் அன்னாபிஷேகம்!



பழனி, ஜூலை. 02–

பழனி முருகன் கோவிலின் உபகோவில் பெரியாவுடையார் சிவன் கோவில் ஆகும். இங்கு உலக நன்மைக்காக அன்னாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக லிங்க வடிவில் வீற்றிருக்கும் பெரியாவுடையார் சிவபெருமானுக்கு 16 வகையான பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. பின்பு அன்னத்தால் அபிஷேகமும், அலங்காரமும் செய்யப்பட்டது. பின்பு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி மாரிமுத்து செய்திருந்தார். பெரியாவுடையாருக்கு அன்னாபிஷேகம், சிறப்பு பூஜைகள் மற்றும் அன்னதானம் ஸ்ரீ கந்த விலாஸ் குடும்பத்தார் சார்பாக நடைபெற்றது. உபயதாரர்கள் பழனி ஸ்ரீ கந்த விலாஸ் நிறுவனர் உரிமையாளர்கள் என் செல்வகுமார், எஸ் பிரேமா செல்வகுமார், எஸ் நவீன் விஷ்ணு, எஸ் நரேஷ்குமரன், ஆகியோர்.

இந்நிகழ்ச்சியில் சுகிதா மெட்டல் மார்ட் உரிமையாளர் சுகுமாரன், பட்டத்து குருக்கள் அமிர்தலிங்கம், செல்வ சுப்பிரமணியம், பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, பெரியநாயகி கல்வி அறக்கட்டளை சுந்தரம், முன்னாள் கோவில் சூப்பிரண்டு சந்திரசேகர், நெய்க்காரப்பட்டி முருகேசன், பொம்மைக் கடை மணி, தமிழக வேளாளர் பேரவை நிர்வாகிகள் சிவசுப்பிரமணியன், பாலமுருகன், ராஜாமணி, ராமநாத கிருஷ்ணன், துரைசாமி, குமரேசன், மதுரை வீரன், மற்றும் சோலை தேவர் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். பக்தர்களுக்கு அன்னதான விருந்து வழங்கப்பட்டது.



# கஷ்டங்கள் தீர ஆன்மீகம் சொல்லும் எளிய பரிகாரங்கள்!



இந்த பரிகாரம் எல்லாம் முன்கூட்டியே தெரிந்திருந்தால் வாழ்க்கையில் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு இருக்கவே வேண்டாம் ஒட்டுமொத்த பிரச்சனைக்கும் ஒரே முற்றுப்புள்ளி வைக்க இதோ ஆன்மீகம் சொல்லும் எளிய பரிகாரங்கள்;

1.சில பேருக்கு மனது ரொம்பவும் குழப்பமாக இருக்கும் மனசு சரியில்லைங்க படுத்தால் தூக்கம் இல்லை என்ன முடிவு எடுப்பது என்று தெரியவில்லை கஷ்டம் துரத்தி துரத்தி அடிக்கிறது என்ன செய்வது தினமும் காலையில் எழுந்து கொஞ்சம் அச்சு வெல்லத்தோடு பச்சரிசி கலந்து கொள்ளுங்கள் இதை புறாவுக்கு சாப்பிட கொடுக்க வேண்டும் உங்கள் மொட்டை மாடியில் புறா வந்தால் அங்கேயும் இதை வைக்கலாம் அல்லது புறாக்கள் தங்கும் கோபுரங்கள் இருக்கும் அல்லவா அந்த இடத்திற்கு கொண்டு போய் இந்த உணவை புறாக்களுக்கு போட்டுவிட்டு வரலாம் அது உங்களுடைய சௌகரியம் புறாவுக்கு இனிப்பு கலந்த உணவை வைத்தால் மனது சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் தீரும் மனக்குழப்பும் தெளிவு பெறும்

2.நல்லாதான் இருந்தேன் ஆனால் கொஞ்ச நாட்களாக வாழ்க்கையில் இருள் சூழ்ந்து விட்டது பண கஷ்டம் வியாபாரத்தில் வருமானம் இல்லை நல்ல வேலை இல்லை நல்ல சம்பளம் இல்லை அரச வாழ்வை பெற வேண்டும் என்றால் என்ன செய்வது ஒரு அரச மர கன்றை கோவிலில் நட்டு தண்ணீர் ஊற்றி வளர்த்து வர வேண்டும் ஏதாவது ஒரு கோவிலில் அனுமதியை வாங்கிக் கொள்ளுங்கள் அந்த கோவிலில் உங்கள் கைகளால் அரச மரத்தை நட்டு வையுங்கள் நட்டு வைத்துவிட்டு அதை கவனிக்காமல் விடக்கூடாது தினமும் தண்ணீர் ஊற்றி அந்த செடியை பராமரித்து மரம் போல வளர்த்து விட்டீர்கள் என்றால் உங்களுடைய வம்சம் எந்த கஷ்டமும் இல்லாமல் வளரும்

3.உங்கள் குழந்தைகள் நன்றாக படிக்கவில்லையா ராமகிருஷ்ண பரமஹம்சர் விவேகானந்தர் இவர்களுடைய படத்தை சிறிய அளவில் வாங்கிக் கொள்ளுங்கள் பாக்கெட் சைஸில் கூட விற்கின்றது இவர்களின் படத்தை படிக்கும் குழந்தைகளுக்கும் முன்பாக வைக்க வேண்டும் படிக்கும் குழந்தைகளை இந்த படத்தின் முன்பு அமர்ந்து ஒரு இரண்டு நிமிஷம் கண்களை மூடி வேண்டிக் கொள்ள சொல்லுங்கள் படிப்பு சரியாக வர வேண்டும் அறிவு சார்ந்த பிரச்சனைகள் வரக்கூடாது வாழ்க்கையில் படித்து நன்றாக முன்னேற வேண்டும் என்று நிச்சயமாக இந்த ஒரு சின்ன வேண்டுதல் உங்களுடைய குழந்தைகளுக்கு நல்ல படிப்பை கொடுக்கும் இவர்களுடைய திரு உருவப் படத்திற்கு முன்பாக அமர்ந்து படித்தால் அறிவாற்றல் மேலும் மேலும் அதிகரிக்கும் படித்து அறிவுத்திறனோடு வாழ்க்கையில் முன்னேறியவர்கள் பற்றிய கதையை உங்களுடைய பிள்ளைகளுக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டே இருங்கள் அதுவும் ஒரு தூண்டுகோலாக இருக்கும்

4. ராகு கேதுவால் பிரச்சனையா? பரிகாரம் செய்ய கையில் பணம் காசு இல்லையா திருமணம் நடக்கவில்லை என்னதான் செய்வது நிறைய சிவன் கோவில்களில் நாகலிங்க மரம் இருக்கும் அந்த நாகலிங்க மரத்திற்கு மஞ்சள் குங்கும போட்டு வைத்து இரண்டு விளக்கு ஏற்றி வைத்து 25 முறை அந்த மரத்தை வலம் வந்தால் உங்களுக்கு ராகு கேது தோஷம் ராகு திசை கேது திசை நடந்து வாழ்க்கையில் ரொம்பவும் பிரச்சனை இருந்தால் கூட அந்த பிரச்சனைகளை எல்லாம் சமாளித்து வாழ்க்கையை நகர்த்திச் செல்லக்கூடிய தைரியம் உங்களுக்கு வந்துவிடும் நம்பிக்கை உள்ளவர்கள் மேல் சொன்ன இந்த எளிமையான ஆன்மீகம் பரிகாரத்தை செய்து பலன் பெறலாம்

5. தினமும் காலை அல்லது மாலை நேரத்தில் வீட்டில் விளக்கேற்றி இறைவனை மனமுருகி வழிபடுவது மன அமைதியை அதிகரிக்கும். துளசி செடிக்கு தண்ணீர் ஊற்றுதல், ஏழைகளுக்கு அன்னதானம் செய்தல், கோவிலில் நெய் தீபம் ஏற்றுதல், நன்றியுணர்வுடன் பிரார்த்தனை செய்தல் போன்ற எளிய ஆன்மீக வழிமுறைகள் நம்பிக்கையையும் நேர்மறை எண்ணங்களையும் வளர்க்க உதவும்.

# பசு, எருமை கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தொடக்கம்!

தேனி, ஜூலை. 02–


தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், வடபுதுப்பட்டி ஊராட்சி பின்னத்தேவன்பட்டியில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் தேசிய கால்நடை நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் 9–வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன் ஆகியோர் கலந்து கொண்டு, தடுப்பூசி முகாமினை தொடங்கி பார்வையிட்டனர்.

இந்த கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று (01.07.2026) முதல் 31.07.2026 வரை 31 நாட்களுக்கு 54 மருத்துவ குழுக்கள் மூலம் மாவட்டத்தில் உள்ள சுமார் 1,02,450 கால்நடைகளுக்கு தடுப்பூசிப்பணி இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே, கால்நடை வளர்ப்போர் இம்முகாமினை தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மண்டல இணை இயக்குநர் மரு.கிரிஜா, துணை இயக்குநர் மரு.சுகுமார், உதவி இயக்குநர்கள் மரு. பாஸ்கரன், மரு.ஈஸ்வரன், மரு.சிவரத்னா, கால்நடை மருத்துவர் மரு.செந்தில் ராஜகுரு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நலம் நலமறிய..!
மருத்துவ குறிப்புகள்



## மூட்டு வலி என்ன? எல்லா வலியும் பறந்துரும்!



பணம் சம்பாதிப்பதில் திறமையாக இருக்கும் நாம், ஆரோக்கியத்தை பேணுவதில் அதே அளவு கவனம் செலுத்தவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. வாழ்க்கையில் பணத்தைத் தேடி தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் நிலையில், உடல் நலத்திற்கு தேவையான அக்கறை குறைந்து வருகிறது. இதன் விளைவாக, இன்று பல புதிய வகை நோய்கள் அதிகரித்து வருவதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். வாழ்க்கை முறை மாற்றம், மன அழுத்தம் மற்றும் தவறான உணவு பழக்கங்கள் ஆகியவை இதற்குக் காரணமாகின்றன.

பணம் சம்பாதிப்பதற்காக செலுத்தும் கவனத்தில் ஒரு சிறிய பகுதியையாவது ஆரோக்கியத்திற்காக ஒதுக்கினால், பல நோய்களைத் தவிர்க்க முடியும். இதனால் மருத்துவச் செலவுகளையும் குறைத்து, ஆரோக்கியமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும். அந்த வகையில், பலரும் தங்கள் ஆரோக்கியத்தை எளிமையாகக் காக்க மேற்கொள்ளும் ஒரு முயற்சியாக நடைப்பயிற்சியே அமைந்துள்ளது.

ஆம், உண்மை தான். தினமும் சுமார் 30 நிமிடங்கள் வேகமான நடைப்பயிற்சி செய்தாலே உடலுக்கும் மனதுக்கும் பல்வேறு நன்மைகள் கிடைக்கும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து நடைப்பயிற்சி செய்வது உடலில் உள்ள கூடுதல் கலோரிகளை எரிக்க உதவுவதோடு, இரத்த ஓட்டத்தை சீராக்கி இதயத்தின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. இதன் மூலம் உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கவும், நாள்பட்ட நோய்கள் ஏற்படும் அபாயம் குறையவும் வாய்ப்பு உள்ளது.

விறுவிறுப்பான நடைப்பயிற்சி இதயத்தை வலுப்படுத்தி இரத்த நாளங்களின் செயல்திறனை மேம்படுத்துகிறது. இதனால் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருக்கவும், கெட்ட கொலஸ்ட்ரால் குறையவும் உதவுகிறது. நடைப்பயிற்சி கால்கள், இடுப்பு மற்றும் முதுகுத் தசைகளை வலுப்படுத்துகிறது. மூட்டுகளின் இயக்கத்தை சீராக்கி வலி மற்றும் இறுக்கத்தை குறைக்க உதவுகிறது.

நடைப்பயிற்சி எலும்புகளின் வலிமையை அதிகரித்து வயது மூப்பில் ஏற்படும் பலவீனத்தை குறைக்கிறது. அதே நேரத்தில் நோய் எதிர்ப்பு சக்தியையும் மேம்படுத்துகிறது. உணவுக்குப் பிறகு சிறிது நேரம் நடப்பது இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுகிறது. இது நீரிழிவு அபாயத்தை குறைக்கவும் உதவுகிறது.

நடைப்பயிற்சியின் மூலம், மூளைக்கு அதிக ஆக்சிஜன் கிடைக்கிறது. இதனால், நினைவாற்றல் மற்றும் கவன திறனை மேம்படுத்துகிறது. மேலும் செரிமான செயல்பாடும் சீராக நடைபெற உதவுகிறது. உடல், கை கால் வலி போன்ற பல பிரச்சனைகள் நாம் நடைப்பயிற்சி செய்வதால் குணமாகும். இதய நோய் உள்ளவர்கள், நடைப்பயிற்சி செய்ய விரும்பினால் ஒருமுறை மருத்துவரின் ஆலோசனையை பெறுவது அவசியம். நடைப்பயிற்சியின் போது அசௌகரியம் ஏற்பட்டால் உடனடியாக நிறுத்த வேண்டும்.

## திமுக., மறுசீரமைப்பு குழுவால் கடும் அதிருப்தியில் நிர்வாகிகள்!

மதுரை, ஜூலை. 02–

சட்டசபை தேர்தலில் தி.மு.க., 59 தொகுதிகளிலும், கூட்டணியுடன் சேர்ந்து மொத்தம் 73 தொகுதிகளிலும் வென்றது. இரண்டாவது முறையாக ஆட்சி அமைக்கும் ஆசை, த.வெ.க.,வின் அபார வெற்றியால் தகர்ந்தது. எனவே, தோல்விக்கான காரணங்களை ஆராய 38 பேர் கொண்ட குழுவை தி.மு.க., அமைத்தது.

தொகுதி வாரியாக களஆய்வு நடத்திய அந்த குழு, 34 மா.செ.,க்கள் மீது நடவடிக்கை, 2 சட்டசபை தொகுதிகளுக்கு ஒரு மா.செ., என்பன உள்ளிட்ட பரிந்துரைகளை, ஸ்டாலினிடம் முன்வைத்தது. அந்த அறிக்கையின்படி நடவடிக்கைகளை எதிர்பார்த்து நிர்வாகிகள் காத்திருந்தனர்.

ஆனால், 'உடன்பிறப்பின் குரல்' எனும் ஆன்லைன் நிகழ்ச்சியில் 6 லட்சம் பேர் விருப்பம் தெரிவித்தபடி, தி.மு.க., மறுசீரமைப்புக் குழு அமைத்துள்ளதாக ஸ்டாலின் அறிவித்தார்.

இதன் வாயிலாக, தேர்தல் தோல்வி குறித்து ஆய்வு செய்த குழுவின் பரிந்துரையை தி.மு.க., தள்ளிப்போடுகிறதா என கட்சிக்குள் அதிருப்தி உருவாகியுள்ளது.

தி.மு.க., நிர்வாகிகள் கூறியதாவது: தேர்தல் தோல்வி குறித்த ஆய்வுக்குழு அறிக்கை மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்டாலின் உறுதியளித்தார். ஆனால் நடவடிக்கை எடுத்தால் த.வெ.க.,விற்கு ஓடிவிடுவர் என தலைமை அஞ்சுகிறது.

இதனிடையே, வரும் 5ம் தேதி லண்டன் செல்லும் ஸ்டாலின் குடும்பத்தினர், 20ம் தேதி திரும்புகின்றனர். அதுவரை அதிருப்தி நிர்வாகிகள் த.வெ.க.,வுக்கு தாவி விடக் கூடாது என்பதற்காக மறுசீரமைப்பு குழுவை ஸ்டாலின் நியமித்துள்ளாரோ என்று தான் தோன்றுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விரைவில் அறிமுகமாகும் ஓய்வூதியம், மருத்துவ காப்பீடு!



புதுடெல்லி, ஜூலை 02–

ஓய்வூதியம், மருத்துவ காப்பீடு இணைந்த புதிய திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்ய உள்ளது.

வயது முதிர்ந்த காலத்தில் ஒவ்வொரு மனிதருக்கும் நிம்மதியான வாழ்க்கையும், தடையற்ற மருத்துவ வசதியும் மிகவும் அத்தியாவசியம். பொதுவாக, ஓய்வூதியத் திட்டங்களும் மருத்துவக் காப்பீடுகளும் தனித்தனியாகவே இருக்கும் நிலையில், தற்போது இவை இரண்டையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்யவுள்ளது.

வயதான காலத்தில் ஏற்படும் மருத்துவச் செலவுகளைக் கண்டு அஞ்சாமல், மக்கள் தங்களின் சேமிப்பைக் கொண்டே தரமான சிகிச்சையைப் பெற வழிவகை செய்யும் புதிய திட்டத்தை (என்.பி.எஸ். சுவாஸ்த்யா பென்ஷன்) இன்னும் 70 நாட்களுக்குள் அறிமுகப்படுத்தப்படும் என்று ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அதன் தலைவர் எஸ். ராமன் கூறும் போது,"இந்த திட்டம் ஒப்புதல் பெற்று, தற்போது அதனை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது" என்றார்.

இந்த புதிய திட்டத்தின்படி ஓய்வூதிய நிதி நிறுவனங்கள், மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு வழங்கும். குறிப்பாக, ரூ.5 லட்சம் முதல் ரூ.7 லட்சம் வரை செலவாகக்கூடிய கடுமையான நோய்கள் மற்றும் பெரிய மருத்துவ சிகிச்சைகளின் செலவுகளை சமாளிக்க இந்த திட்டம் உதவும்.

மேலும், இந்த திட்டத்தின் கீழ், முதலில் ஓய்வூதிய மருத்துவக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட தொகை நேரடியாக மருத்துவமனை அல்லது மருத்துவ சேவை வழங்குநருக்கு செலுத்தப்படும். அதன் பிறகு மீதமுள்ள செலவுகளை காப்பீட்டு நிறுவனம் ஏற்கும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களுக்கான மருத்துவ ஓய்வூதியக் கணக்கில் ரூ.3,000 முதல் ரூ.1 லட்சம் வரை பங்களிப்பு செய்ய முடியும்.

## காத்து வாங்கிய அதிமுக மகளிரணி கூட்டம்: பழனிசாமி அப்செட்!



சென்னை, ஜூலை. 02–

அ.தி.மு.க., மகளிர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பெரும்பாலானோர் பங்கேற்காததால், பொதுச்செயலர் பழனிசாமி கடும் அதிருப்தி அடைந்தார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க., தலைமை அலுவலகத்தில், அக்கட்சியின் மகளிரணி கூட்டம் நேற்று நடந்தது. இதில், அந்த அணியில் உள்ள 400 நிர்வாகிகள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 200க்கும் குறைவான பெண் நிர்வாகிகளே வந்திருந்தனர். கூட்டம் இல்லாததை கண்ட பழனிசாமி பெரும் ஏமாற்றமடைந்தார்.

கூட்டத்தில், சட்டம் – ஒழுங்கு சீர்கேடு, கல்லூரி உதவி பேராசிரியர் தேர்வு முறைகேடு, மின்வெட்டு உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்து, 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிகழ்ச்சியில் பழனிசாமி பேசியுள்ளதாவது:

சட்டசபை தேர்தலில், இக்கட்டான சூழலில் அ.தி.மு.க., 47 இடங்களில் வெற்றி இருக்கிறது. கூட்டணி பலத்தால் வெற்றி பெற்ற தி.மு.க., தற்போது தனித்து நிற்கிறது. மின்வெட்டு, சட்டம் – ஒழுங்கு பிரச்னையால் குறுகிய காலத்துக்குள், தமிழக வெற்றிக் கழக அரசு மீது மக்கள் அதிருப்தியாகி விட்டனர்.

வரும் இடைத்தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் சிறப்பாக செயலாற்றினால், நாம் வெற்றி பெறுவோம். ஊரக உள்ளாட்சி தேர்தல், நகராட்சி தேர்தல், அடுத்த வரும் பொதுத்தேர்தல்களில், அ.தி.மு.க., வேட்பாளர்களாக 50 சதவீதம் அளவுக்கு பெண்களுக்கே வாய்ப்பளிக்க முடிவு செய்துள்ளேன்.

கட்சியில் இருந்து துரோகிகள் வெளியேறுவதால், தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடுகின்றனர். அ.தி.மு.க., ஜனநாயக இயக்கம் என்பதால் தான், பிரச்னைகள் எழுகின்றன; எல்லா பிரச்னைகளும் சரியாகி விடும். இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

### துரோகிகளுக்கு துரோகி பட்டம் தான் கிடைக்கும்

துணை பொதுச்செயலர் கே.பி.முனுசாமி அளித்த பேட்டி: கட்சிக்காக உழைத்த தொண்டன் இன்னும் கட்சியில் இருக்கிறான். ஆட்சியில் இல்லாத இந்த சோதனை காலத்தில் கட்சியை தாங்கி பிடிக்காமல், சுயதேவைக்காக வெளியேறுவோர் தான் துரோகிகள். துரோகிகளுக்கு துரோகி என்று தான் பட்டம் கிடைக்கும். கட்சியை விட்டு வெளியேறும் துரோகிகளை பற்றி பேச எதுவுமில்லை. பதவிகளை அனுபவித்து, எல்லா வசதிகளையும் பெற்று விட்டு, அதனால் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி, வழக்குகளை சந்தித்த அந்த துரோகிகள் எங்கே சென்றால் எங்களுக்கு என்ன. இவ்வாறு அவர் கூறினார்.

### பெண் நிர்வாகிகள் 'ஷாக்'

சட்டசபை தேர்தலில் தோல்வி அடைந்து, எதிர்க்கட்சி அந்தஸ்தை அ.தி.மு.க., இழந்திருக்கிறது. ஆனால், நேற்று நடந்த மகளிரணி கூட்டத்தில், 'தேர்தலில் மகத்தான வெற்றி பெற, அல்லும் பகலும் உழைத்த பழனிசாமிக்கு நன்றியும் பாராட்டும்' என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனால், நிர்வாகிகள் பலரும் அதிர்ச்சியடைந்தனர். கட்சி தலைமை அலுவலகத்தில் கழிப்பறை மிக மோசமான நிலையில் இருந்தது. இதனால், கூட்டத்துக்கு வந்த பெண் நிர்வாகிகள், அதை பயன்படுத்த முடியாமல் முகம் சுளித்தனர்.

## தவெக ஆட்சியை கவிழ்க்க சதித்திட்டம்; செந்தில் பாலாஜியின் வீடுகளில் போலீஸ் தேடுதல் வேட்டை!



கரூர், ஜூலை. 02–

தவெக ஆட்சியைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டிய வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்கை போலீசார் தேடி வருகின்றனர்.

தவெக ஆட்சியை கவிழ்க்கும் முயற்சியாக, அக்கட்சியின் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்க திமுகவினர் பேரம் பேசியதாக புகார் எழுந்தது. ஊத்தங்கரை எம்எல்ஏ இளையராஜாவிடம் ரூ.35 கோடி பேரம் பேசிய வழக்கில் யூடியூபர் திருநாவுக்கரசு மற்றும் கரூரைச் சேர்ந்த செந்தில்பாலாஜிக்கு நெருக்கமானவர்கள் 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் ஏற்கனவே, சென்னையைச் சேர்ந்த செல்வன், சீனிவாசன், ராஜேஷ் ஆகியோர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், நாடார் பாதுகாப்பு பேரவை தலைவரும், அதிமுக பிரமுகருமான சீனிவாசன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 9ஆக உயர்ந்துள்ளது. இதனிடையே, பேரம் பேசிய வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்கை சென்னை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். அவரை கைது செய்வதற்காக, கரூரில் செந்தில் பாலாஜிக்கு சொந்தமான வீடு, பண்ணை உள்ளிட்ட இடங்களில் போலீசார் சோதனை நடத்தினர்.

## டெல்லிக்கு மஞ்சள், மும்பைக்கு ரெட் அலர்ட்: வானிலை மையம் எச்சரிக்கை!



டெல்லி, ஜூலை. 02–

டெல்லியில் ஆங்காங்கே மழை பெய்துவருவதால் வெப்பம் சற்று குறைந்துள்ளது. டெல்லியின் என்சிஆர் பகுதிக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேகமூட்டமான வானமும், மிதமான மழை பொழிவும் பலத்த காற்றும் வீசும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.


மகாராஷ்டிரா மாநிலம் முழுவதும் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது. மும்பை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் தொடர்ந்து மூன்றாவது நாளாக இன்றும் மழை பெய்து வருகிறது. இதனால் ஆங்காங்கே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன் சர்ச்கேட் ரயில் நிலையம் அருகே பெரிய மரம் ஒன்று வேரோடு சாய்ந்துள்ளது.

இந்நிலையில் மும்பைக்கு ரெட் எச்சரிக்கையும் தானே மற்றும் ராய்கட் பகுதிகளுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் வாழும் மக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு இந்திய வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுளள்து.

அடுத்த 24 மணி நேரத்தில் மும்பை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் கன முதல் மிகக் கனமான மழை பெய்யும் என்றும், ஆங்காங்கே பலத்த காற்று வீசும் என்றும் வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இந்நிலையில் தொடர் மழையின் காரணமாக, பல தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கியது. இதனால் சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இத்துடன், மும்பையின் புறநகர் ரெயில் சேவைகளிலும் தாமதம் ஏற்பட்டது. வெள்ளம் சூழ்ந்த சாலைகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் காரணமாகப் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகினறனர்.

## வேலை வாய்ப்பு IBPS வங்கி 745 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: IBPS வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (Institute of Banking Personnel Selection)
அறிவிப்பு எண்: CRP SPL–XVI
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: நிரந்தரப் பணி
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 745 சிறப்பு அதிகாரி (Specialist Officer) நிலை பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும் எங்கு வேண்டுமானாலும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 01.07.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 21.07.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையதளம் வழியாக (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.ibps.in/

## தொடர்ந்து உயர்ந்து வரும் தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 02–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,200 உயர்ந்து ரூ.1,07,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.150 உயர்ந்து ரூ.13,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தை போல வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.250–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## இடைத்தேர்தலில் மதிமுக போட்டியிடாது - வைகோ உறுதி!



சென்னை, ஜூலை. 02–


தமிழகத்தில் திருச்சி கிழக்கு, மதுராந்தகம், தாராபுரம், அம்பாசமுத்திரம், பெருந்துறை, விராலிமலை, கரூர் ஆகிய 7 தொகுதிகள் காலியாக உள்ளன. இந்த 7 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் எப்போது என்ற எதிர்பார்ப்பு அரசியல் கட்சிகள் இடையே எழுந்துள்ளது.

இந்நிலையில் நெல்லையில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, இடைத்தேர்தலில் மதிமுக போட்டியிடாது என்று தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

* தவெக கூட்டணி வெற்றி பெறுவதற்கு மதிமுக முழு மூச்சாக உழைக்கும்.
* ரூ.35 கோடி பேரம் பேசப்பட்ட விவகாரம் தமிழ்நாட்டில் இதுவரை நடக்காத அரசியல் மோசடி.

இவ்வாறு அவர் கூறினார்.

## பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு - ஹால் டிக்கெட் வெளியீடு!



சென்னை, ஜூலை. 02

பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு எழுதவுள்ள மாணவர்கள் நாளைமுதல் ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

தேர்வர்கள் தேர்வு மற்றும் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்வது தொடர்பான சந்தேகங்களுக்கு 9498383075/ 9498383074 ஆகிய கைப்பேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# ஜூலை 12-ல் 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் முதல் மாநாடு!



சென்னை, ஜூலை. 02–

ஜூலை 12ம் தேதி பொள்ளாச்சியில் 'We The Leaders' அமைப்பின் முதல் மாநாடு நடைபெறவுள்ளது என அண்ணாமலை பேட்டி அளித்துள்ளார். பாஜகவில் இருந்து விலகி 'we the leaders' அமைப்பை தொடங்கிய பின் அண்ணாமலை முதல் மாநாட்டை நடத்துகிறார்.

முன்னதாக, கடந்த ஜூன் மாதம் பாஜகவில் இருந்து விலகிய அண்ணாமலை சில நாட்களில் சமூக வலைதளம் மூலம் நேரலையில் மக்களை சந்தித்து பேசினார்.

அதில், wetheleader.org என்ற இயக்கத்தை தொடங்குவதாக அண்ணாமலை அறிவித்தார். இந்த இயக்கத்தை பின்னர் அரசியல் அரசியல் கட்சியாக கட்டமைக்க அண்ணாமலை முடிவு செய்துள்ளார்.

www.wetheleader.org இணையதளத்தில் தங்கள் பெயர், மொபைல் எண்ணை பதிவு செய்து பலர் உறுப்பினர்களாக இணைந்து வருகின்றனர். இந்நிலையில் அவர் அறிவிப்பை வெளியிட்ட 24 மணி நேரத்தில் 13 லட்சம் பேர் www.wetheleader.org மூலம் அவரின் இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விமானத்தில் புதிய கட்டண சலுகை!



புதுடில்லி, ஜூலை. 02–

உள்நாடு மற்றும் வெளி நாட்டு விமானங்களில், கைப்பையுடன் மட்டும் பயணிக்க விரும்பும் பயணியருக்காக, 'இண்டிகோ லைட்' என்ற புதிய குறைந்த கட்டண திட்டத்தை, 'இண்டிகோ' விமான நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டின் மிகப்பெரிய விமான போக்குவரத்து நிறுவனமாக, 'இண்டிகோ' உள்ளது. இந்நிறுவனம், 'எகானமி' எனப்படும், சாதாரண வகுப்பு பயணியருக்கு புதிய கட்டண திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

வழக்கமாக, 'எகானமி' வகுப்புக்கு ஏழு கிலோ, 'கேபின் லக்கேஜ்' எனப்படும், கைப்பை மற்றும் 15 முதல் 20 கிலோ, 'செக் --- இன்' லக்கேஜ் எனப்படும், பெட்டிகளை தனியாக கொண்டு வரும் வசதி வழங்கப்படும்

'இண்டிகோ'வின் 'லைட்' கட்டண திட்டத்தில் ஏழு கிலோ வரையிலான கைப்பை மட்டும் எடுத்துச் செல்வோருக்கு அடிப்படை கட்டணத்தை குறைத்துள்ளனர்.

இது குறித்து, 'இண்டிகோ' நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'குறைந்த பைகளுடன் பயணித்து, தங்களுக்கு தேவையான சேவைகளுக்கு மட்டும் கட்டணம் செலுத்த விரும்பும் பயணியருக்காக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

'சந்தை தேவைகளுக்கு ஏற்ப சேவைகளை மாற்றியமைப்பதுடன், விமானப் பயணத்தை குறைந்த செலவில் வழங்க வேண்டும் என்பதே நோக்கம்' என, தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஏற்கனவே, 'ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்' நிறுவனம், கைப்பை மட்டும் எடுத்துச் செல்லும் பயணியருக்கான கட்டணத்தை குறைத்து உள்ளது.

# பழனிசாமிக்கு வேலுமணி அணியினர் பகிரங்க கடிதம்!

சென்னை, ஜூலை. 02–

'அ.தி.மு.க., எனும் ஆல விருட்சம், உங்கள் முடிவுகளால் கரைந்து வருகிறது' என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமிக்கு, வேலுமணி உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் கடிதம் எழுதி உள்ளனர். அ.தி.மு.க.,வில் ஏற்பட்ட பிளவை ஒட்ட வைக்கும் முயற்சியாக வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோருக்கு புதிய பொறுப்புகளை பழனிசாமி வழங்கி இருந்தார்.

இந்நிலையில், விஸ்வநாதன், வேலுமணி, தங்கமணி, அன்பழகன், வீரமணி,




அருண்மொழிதேவன், பாலகிருஷ்ண ரெட்டி, கிருஷ்ணமுரளி, சுகுமார் என, ஒன்பது பேர் பழனிசாமிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அதன் விபரம்:

அ.தி.மு.க., பொதுச்செயலராகிய நீங்கள், தி.மு.க.,வுடன் இணைந்து ஆட்சி அமைக்க முடிவு எடுத்ததால் தான், 25 எம்.எல்.ஏ.,க்கள், தி.மு.க., எதிர்ப்பில் வளர்ந்த த.வெ.க.,வை ஆதரித்தோம். ஆனால், நிர்வாகிகளை பொறுப்பில் இருந்து விடுவித்தீர்கள்.

ஜெயலலிதா மறைவுக்கு பின், உங்களை முதல்வராகவும், பொதுச்செயலராகவும் அமர வைக்க, கட்சி மீதான வழக்குகளையும் எதிர்கொண்ட சி.வி.சண்முகத்துக்கு எந்த பதவியும் வழங்காமல் ஒதுக்கி வைத்ததை ஏற்க முடியாது.

தேர்தலுக்கு முன்பும், பின்பும் உங்களின் செயல்பாடுகளால் விலகிச் சென்ற எம்.எல்.ஏ.,க்களை, மீண்டும் கட்சி பணியாற்ற அக்ரி கிருஷ்ணமூர்த்தி, ஓ.எஸ்.மணியன் வாயிலாக கேட்டுக் கொண்டீர்கள்.

அதன்படி, சபாநாயகரிடம் கொடுத்த தகுதி நீக்க கடிதத்தை திரும்ப பெற்றோம். நீங்களும் கடிதத்தை திரும்ப பெற்றீர்கள்.

அந்த உடன்படிக்கையின்படி, அவரவர் வகித்த பதவிகளை, ஜூன் 4ம் தேதிக்குள் திருப்பி தருவதாக உறுதியளித்தீர்கள்; கடந்த 22ம் தேதி அது குறித்து நினைவூட்டினோம். ஆனால், தற்போது நீங்கள் அறிவித்துள்ள பொறுப்புகளை பார்க்கும்போது, கட்சி வளர்ச்சியை கருத்தில் கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

முன்பு, 'ஜா, ஜெ' அணி என அ.தி.மு.க., பிளவுபட்டு, மீண்டும் இணைந்தபோது, விலக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் அதே பொறுப்புகளை ஜெயலலிதா வழங்கினார். அதேபோல், பன்னீர்செல்வத்துடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் விலகிச் சென்றவர்களுக்கும், மீண்டும் அதே பொறுப்பு வழங்கப்பட்டது.

தற்போது, நீங்கள் ஒப்புக் கொண்டதை செய்யவில்லை. இதனால் தான், அ.தி.மு.க.,வில் இருந்து சாரைசாரையாக விலகி, த.வெ.க.,வில் இணைகின்றனர். அ.தி.மு.க., எனும் ஆல விருட்சம், நீங்கள் எடுத்த தவறான முடிவுகளால் கரைந்து வருகிறது.

தற்போது நீங்கள் அறிவித்த பொறுப்புகளை தவறான முடிவாகவே கருதுகிறோம். எனவே, நாங்கள் யாரும் நீங்கள் வழங்கிய பதவிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த பதவிகள் எங்களுக்கு வேண்டாம்; கட்சி உறுப்பினர்களாகவே இருந்து செயல்படுகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அ.தி.மு.க.,வில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன், 'தலைமையின் சுயநலப் போக்கு, கட்சியை விஷமாக்கி வருகிறது' என பழனிசாமி மீது குற்றஞ்சாட்டி உள்ளார்.

# கத்தாரில் அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தை: டிரம்ப் சொன்ன முக்கிய தகவல்!!



வாஷிங்டன், ஜூலை. 02–

மத்திய கிழக்கு போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகளுக்கு சமீபத்திய துப்பாக்கி சண்டைகள் அச்சுறுத்தலாக இருந்த நிலையில், ராஜதந்திரம் நிலைத்து நிற்கிறது என்பதற்கான ஒரு தற்காலிக அறிகுறியாக, கத்தாரில் ஈரானுடனான மறைமுக பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் கண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனல்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரான் தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கிய ஈரானின் துணை வெளியுறவு அமைச்சர் காசெம் கரிபாபாடி, பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துவிட்டதாகவும், தங்களின் ஆரம்ப புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மீறல்களைப் புகாரளிக்கவும் பதிவு செய்யவும் இன்றுக்குள் (வியாழக்கிழமை) ஒரு தகவல் தொடர்புவழியைநிறுவ இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

கடந்த பிப்ரவரி மாத இறுதியில் ஈரான் மீது அமெரிக்க–இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களால் தொடங்கிய போரை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட இந்த ஒப்பந்தம் குறித்து, தோஹாவில் நேரடி பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெறாது என்று ஈரான் வலியுறுத்தி இருந்தது.

''தற்போதைய நிலவரப்படி, ஈரானின் அணு ஆயுத ஒழிப்பு நடவடிக்கை சிறப்பாக முன்னேறி வருகிறது,'' என்று ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் ஏறுவதற்கு முன்பு டிரம்ப் செய்தியாளர்களிடம் கூறினார்.

கத்தார் மற்றும் பாகிஸ்தானின் மத்தியஸ்தத்துடன், கடந்த மாதம் சுவிட்சர்லாந்தின் லூசெர்ன் நகரில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் கையொப்பமிடப்பட்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், 60 நாள் போர் நிறுத்தம், முற்றுகையிடப்பட்ட ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பது, போர் மற்றும் ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்த இறுதி ஒப்பந்தத்திற்கான கால அட்டவணை ஆகியவை அடங்கியுள்ளன.

# ரியல் எஸ்டேட் விளம்பரங்களில் விதிமீறல் இருந்தால் ரூ.50,000 முதல் ரூ.5 லட்சம் வரை அபராதம்!



சென்னை, ஜூலை. 02–

ரியல் எஸ்டேட் விளம்பரங்களில் விதிமீறல் இருந்தால் ரூ.50,000 முதல் ரூ.5 லட்சம் வரை அபராதம் என்று தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையத்தில் பதியாத வீட்டு மனை திட்ட விளம்பரங்களுக்கு ரூ.5 லட்சம் வரை அபராதம். சந்தை விலை அல்லது மற்றவர்களின் வீட்டு மனை திட்டங்களோடு ஒப்பீடு செய்து ரியல் எஸ்டேட் விளம்பரங்கள் கூடாது என்று தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

## சினிமா துளிகள்..!

# "ஜனநாயகன்": ரசிகர்களுக்கு வந்த குட் நியூஸ்!



நடிகர் விஜய் நடிப்பில், இயக்குநர் ஹெச். வினோத் இயக்கியுள்ள 'ஜனநாயகன்' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. விஜய்யின் கடைசி திரைப்படமாகக் கருதப்படும் இந்தப் படம் எப்போது வெளியாகும் என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இந்நிலையில், படத்தின் சென்சார் மற்றும் ரிலீஸ் குறித்து புதிய தகவல் வெளியாகியுள்ளது.

**சென்சார் தாமதத்தால் தள்ளிப்போன ரிலீஸ்**

'ஜனநாயகன்' திரைப்படம் ஆரம்பத்தில் பொங்கல் வெளியீடாகத் திட்டமிடப்பட்டதாக தகவல்கள் வெளியானது. அதனை தொடர்ந்து, விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் மாதம் படத்தை வெளியிட படக்குழு திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

ஆனால், திரைப்படத்திற்கு தணிக்கைச் சான்றிதழ் கிடைக்காததால் திட்டமிட்ட தேதிகளில் படம் வெளியாகவில்லை. இதனால் ரசிகர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் அதிகாரப்பூர்வ அறிவிப்புக்காக காத்திருந்தனர்.

**'ஏ' சான்றிதழ் வழங்கப்பட்டதாக தகவல்... இந்த மாதமே ரிலீஸா?**

தற்போது வெளியாகியுள்ள தகவலின்படி, 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு தமிழில் 'ஏ' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதையடுத்து, படத்தை இந்த மாதத்திலேயே திரையரங்குகளில் வெளியிட படக்குழு தீவிரமாக திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இதுகுறித்து படக்குழு சார்பில் இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. எனவே, சென்சார் சான்றிதழ் மற்றும் வெளியீட்டு தேதி தொடர்பான உறுதியான தகவல் விரைவில் வெளியாகும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

# விரைவில் கைதாகும் செந்தில் பாலாஜி?



சென்னை, ஜூலை. 02–

தவெக ஆட்சியை கவிழ்க்க சட்டப்பேரவையில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரவுள்ளனர் என்றும் ஆளுங்கட்சியாக இருந்தாலும் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதி தவெக எம்எல்ஏ இளைய ராஜாவிடம் ரூ.35 கோடி பேரம் பேசி உள்ளனர். இது தொடர்பாக அவர் சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜை சந்தித்து புகார் அளித்தார். இந்த புகார் தொடர்பாக விசாரணை நடத்திய போலீசார், இதில் தொடர்புடையவர்களை கைது செய்து வருகின்றனர். இதில், இதுவரை 6 பேரை காவல்துறை கைது செய்துள்ளது.

மேலும் கைதானவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியும் இந்த விவகாரத்தில் தொடர்பு இருப்பதாக காவல்துறை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

அதன்படி, செந்தில் பாலஜியை போலீசார் தேடி வருகின்றனர். தற்போது சென்னை போலீசார் கரூரில் தேடுதல் வேட்டையை தொடங்கியுள்ளனர்.

செந்தில் பாலாஜிக்கு சொந்தமான வீடு, பண்ணை உள்ளிட்ட இடங்களிலும் தேடுதல் வேட்டையை தொடங்கியுள்ளனர். இதனால், இந்த விவகாரம் தொடர்பாக செந்தில் பாலாஜி விரைவில் கைதாகக்கூடும எனவும் கூறப்படுகிறது.

# ரூ.50 கோடிக்கு த.வெ.க எம்.எல்.ஏ.-க்களை வாங்க நினைக்கிறார் மு.க.ஸ்டாலின்..!- அமைச்சர் நிர்மல் குமார்!!



சென்னை, ஜூலை. 02–

சென்னை பெருங்குடியில் மாணவர் விடுதி அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்ற பின் அமைச்சர் நிர்மல் குமார் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

ரூ.50 கோடிக்கு எம்எல்ஏக்களையும் ரூ.2000 கொடுத்து மக்களின் வாக்குகளையும் வாங்க மு.க.ஸ்டாலின் நினைக்கிறார்.

மக்கள் அளித்த தீர்ப்பை பணத்தை கொண்டு மாற்ற மு.க.ஸ்டாலின் நினைக்கிறார். மு.க.ஸ்டாலின் செய்வதைமக்கள்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு தவெக எம்எல்ஏவையும் மிரட்டி தனிப்பட்ட முறையில் சந்தித்து தொலைபேசியில் பேசிமிரட்டல்விடுத்துள்ளனர்.

30 நாட்களின் ஆட்சி கவிழும் என எந்த நம்பிக்கையில் மு.க.ஸ்டாலின் பேசினார். எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கி ஆட்சினை கவிழ்க்கலாம் என்ற நம்பிக்கையில் பேசியிருக்கிறார்.

திமுகவை காப்பாற்ற வேண்டும் என்றால் ஸ்டாலின் அக்கட்சியை விட்டு விலக வேண்டும்.

அதிமுகவை காப்பாற்ற இபிஎஸ் அந்த கட்சியில் இருந்து விலக வேண்டும்.

மக்களவை தவிர நாங்கள் யாருக்கும் பயப்படவில்லை, நேர்மையாக இருக்கும் நாங்கள் எதற்கும் யாருக்கும் பயப்பட மாட்டோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஒட்டன்சத்திரத்தில் தேசிய மருத்துவர்கள் தினம் - பரிசளிப்பு விழா!



ஒட்டன்சத்திரம், ஜூலை. 02–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் தேசிய மருத்துவர்கள் தினம் முன்னாள் ஒட்டன்சத்திரம் தலைமை மருத்துவர் டாக்டர்.ஏ.ஆசைத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் ஒட்டன்சத்திரம் வாக்கிங் கிளப் தலைவர் ஆர்.வேலுச்சாமி வரவேற்று பேசினார். இதில் சமூக ஆர்வலரும், நேதாஜி இளைஞர் நற்பணி மன்றத் தலைவருமான பி.ஆறுமுகம், மதுரை மணி சே.சதீஸ்குமார், ஒட்டன்சத்திரம் ஸ்டார் மொபைல்ஸ் பி.சிவசாமி, முக்கிய பிரமுகர் ஆர். சதாசிவம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இதில் மருத்துவப் பணியில் சிறப்பாக சேவை பணி செய்துவரும் ஒட்டன்சத்திரம் தலைமை மருத்துவமனையின் முன்னாள் தலைமை மருத்துவரும், ஐ.எம்.ஏ ஒட்டன்சத்திரம் கிளைச் செயலாளருமான டாக்டர்.ஏ.ஆசைத்தம்பி அவர்களுக்கு ஒட்டன்சத்திரம் வாக்கிங் கிளப் தலைவர் ஆர்.வேலுச்சாமி சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கி பாராட்டி பேசினார்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020